1984 மார்ச் 24]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற குறிப்பில் மெஜாரிட்டி தொழிற்சங்கம் இதை எதிர்க் கிறது என்று இல்லை. சி.ஐ.டி.யூ. சங்கம் 26-9-1983 ஆம் தேதி ஏற்பட்ட 12 (3) ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மாட்டோம். அது மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள் என்றுதான் என்னிடத்திலே தகவல் இருக்கிறது. அது செப்ப ரேட் இஷ்யூ. சம்பள உயர்வு, பஞ்சப்படி உயர்வு என்பது தனி இஷ்யூ. அதைப் பற்றிய கன்சிலியேஷன் மதுரையில் நடக்கிறது. 12 (3) செட்டில்மென்ட் பற்றி சி.ஐ.டி.யூ. சங்கம் சொல்வதை தஞ்சாவூர் தொழிலாளர் துறை அலுவலர் பரிசீலனை செய்வார்

(ஆ) மதுரைக்கும் மானாமதுரைக்கும் இடைப்பட்டுள்ள கண்மாய் களுக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் விடுதல்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, ''மதுரைக்கும், மானாமதுரைக்கும் இடைப்பட்டுள்ள கண்மாய்களில் வைகை அணையின் தண்ணீரை விட்டு, நிரப்ப வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்ச ரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மதுரைக்கும் மானாமதுரைக்கும் இடையில் வைகை நீர் வழங்கப்படும் கண்மாய்களுக்கு வைகை அணையிலிருந்து சிறப் பாக தண்ணீர் விடுதல் (Special Release) மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. இப்படி சிறப்பாக தண்ணீர் விடுதல் முறையில் வைகை அணையிலிருந்து மேற் கூறப்பட்ட கண்மாய்களை நிரப்புவதற்கு வழங்கப்படும் பாசன நீர் வைகை அணையில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் வைகை கணக்குப் பற்றிலிருந்து (Vaigai Credit) வழங்கப்படுகிறது. இப்படி வழங்கப்படும் நீர் இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங் கப்படுகிறது. (1) வைகை நீர் வழங்கப்படும் கண்மாய்களின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களின் பாசன நீர்த்தேவை (2) வைகை அணையில் வைகை கணக்குப் பற்றில் (Vaigai Credit) இருக்கும் நீரின் அளவு. வைகைக் கணக்குப் பற்றில் போதுமான நீர் சேர்ந்தபிறகு தான் இந்தக் கண்மாய்களுக்கு சிறப்பு தண்ணீர் விடுதல் மூலம் நீர் வழங்கப்படுகிறது. இந்த சிறப்பு தண்ணீர் விடுதல் பெரியாறு வைகை கோட்ட நிர்வாகப் பொறியாளரால் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் களின் ஒத்திசைவைப் பெற்று செயல்படுத்தப்படுகிறது.

[திரு. யா. சை. மு. யூசுப்] [1984 மார்ச் 24

வைகை நீர்த் தேக்கத்தின் மொத்தக் கொள்ளளவில் (6,800 மில்லியன் கன அடி) ஒரு பகுதி பெரியாறு மூலமாகவும் மற்றொரு பகுதி வைகையின் இயற்கை நீர் வரத்து மூலமாகவும் பெறப் படுகிறது. வைகை அணை அமைக்கப்பட்ட காலத்தில் அந்த அணையின் மொத்த கொள்ளளவில் 4,000 மில்லியன் கன அடி பெரியாறு கணக்குப் பற்று என்றும் 2,800 மில்லியன் கன அடி வைகை கணக்குப் பற்று என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வைகை பாசன கண்மாய்களுக்கு சிறப் பாக தண்ணீர் விடுதலைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். ஆனால் கடந்த 7, 8 தேதிகள் வரையில் அந்தப் பகுதி தண்ணீர் இல்லாத பகுதியாக காட்சியளித்தது. தஞ்சா வூர் ஜில்லாவிலே கடுமையான வெள்ளம் ஏற்பட்ட போது அந்தப் பகுதி முழுவதும் வரண்டு இருந்தது. தண்ணீர் வேண்டு மென்று கேட்கக் கூடிய காலத்தில் தண்ணீர் விட முடியாமல் இருந்ததை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக் கிறேன். இந்த வரகனூர் அணை, பாச்சனூர் அணை ஆகிய இரண்டு அணைக் கட்டுகள் மூலமாக கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர்களுக்கு தண்ணீர் பாசனம் செய்யப்படுகிற அமைப்புகள் இருந்தாலும் கூட அந்தப் பகுதியில் தண்ணீல் கிடைப்பதில்லை. ஆனால் தண்ணீர் விடக்கூடிய காலத்தில் பார பட்சமாக விடப்படுவதன் காரணமாக, அந்தப் பகுதியில் ஒரு பகுதியில் அதிகமான தண்ணீரும், இன்னொரு பகுதியிர் குறைவான தண்ணீரும் விடப்படுவதன் காரணமாக பெரும் பகுதி கண்மாய் சரியானபடி பெருகுவதில்லை. அந்த நிலைமையை மாற்றி தண்ணீர் விடுகிறபோது எல்லாக் கண்மாய்களுக்கும் ஏக்கர் விகிதாச்சாரம் அடிப்படையில் முறைப்படுத்தி தண்ணீர் விடப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு இப்போது தான் விவசாயம் செய்ய அங்கே ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே மேலும் ஒரு ரிலீஸ் தண்ணீர் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப் போல ஒரு சில விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் இந்தச் சிறப்பு தண்ணீர் விடுதல் மேற்கொள்ளப்படுகிறது. அந்த முறையில்தான் இப்போது மானாமதுரைக்கும் மதுரைக்கும் இடையே உள்ள பகுதிகளில் உள்ள கண்மாய்களுக்கு தண்ணீர் விடப்பட்டுக் கொண் டிருக்கிறது. ஆகவே நிச்சயமாக விதிமுறைகளுக்கு உட்பட்டு தண்ணீர் விடப்படும்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, தண்ணீர் விடக்கூடிய காலத்திலும், சரி, வெள்ளம் வருகிற போதும் சரி, அங்கே கால்வாய்களை அகலப்படுத்தாமல், ஆழப் படுத்தாமல் இருப்பதன் காரணமாகவும், 1978-79-ல் ஏற்பட்ட

உடைப்புகளை இன்று வரையிலும் அடைக்காமல் இருப்பதன் காரணமாகவும், தண்ணீர் சரியாக வருவதில்லை. அந்த உடைப்புகளை உடனடியாக அடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடைப்புகளைப் பொறுத்தவரையில், உடனடியாக அந்த உடைப்புகள் மூடப்பட்டுக் கொண்டு வருகின்றன. அதற்காக இப்போது தனியாக வெள்ளத் தடுப்புக்கு என்று சிறப்புத் தலைமைப் பொறியாளர் ஒருவரைக் கூட தமிழக அரசு நியமித்து இருக்கிறது. ஆகவே, உடைப்புகளைப் பழுதுபார்க்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம் 1984-85—வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 24—தொழில்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,30,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

திரு. எஸ். சிவராமன் : துணைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் சர்க்கரை ஆலைகள் அதிகமாக இருப்பதால், கரும்புச் சக்கையைக் கொண்டும், வைக்கோல் அதிகமாக இருப்பதாலும் தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.2,30,12,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, வடாற்காடு போளூர் வட்டப் பகுதியில் கூட்டுறவுத் துறையில் ஒரு சக்கரை ஆலை ஏற்படுத்தி அப் பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி வைக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,30,12,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''